JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//176 / 2014 |
| | : | Prosecution P.W - 6 |
| NAME | : | செந்தில்ராணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 13.10.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கினை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர்கள் திரு.ராஜதுரை மற்றும் திரு.ஜமால் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும். வழக்கு கோப்புக்களின் அடிப்படையில் நீதியின் நலன் கருதி வழக்கின் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.12.2012 ம் தேதி காலை 06.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருக்கும் போது ரவி என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 384/2012 இதச பிரிவுகள் 304(A) வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 10.12.2012 ம் தேதி 07.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குத்தாலிங்கம் மற்றும் சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும், பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம்

தயார் செய்துள்ளார், **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ,சா.ஆ.5 மற்றும் அ,சா.ஆ.6 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** அதன் பின் அவர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளரர். அதன் பின் சம்பவ சாட்சிகளான ரவி, சூரியபூ, சுடர்ராஜ் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின் அன்றே தென்காசி அரசு மருத்துமனையில் வைத்து வழக்கில் இறந்துபோன களஞ்சியம் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணையை 09.30 மணிக்கு ஆரம்பித்து 11.00 மணிக்கு பிரேத விசாரணையை முடித்து சடலக்கூறாய்வு வேண்டுதல் விண்ணப்பத்துடன், காவலர் சுடலைமணி என்பவரை பணி நியமனம் செய்து சடலக்கூறாய்வுக்கு பின் நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்க செய்ய அறிவுரை செய்தார். **பிரேதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. சுடலைமணி காவலருக்கு வழங்கிய கடவுசீட்டு அசா.8 ஆக குறியீடு செய்யபடுகிறது.** பிரேதத்தை ஒப்படைத்த காவலர் சுடலைமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின் 11.12.2012 ம் தேதியன்று 17.30 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து தக்க இரு நபர் ஜாமீன் மூலம் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் விபத்தில் சம்பந்தபட்ட வாகனத்தை தென்காசி வட்டார போக்குவரத்து வாகன ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி அவரை விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளாரர். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** அதன் பின் இறந்து போன களஞ்சியம் பிரேதத்தை பரிசோதனை செய்த பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சொர்ணலதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார். அந்த **சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை பணிநியமனம் செய்த கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 304(A) வின் கீழ் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் குற்ற இறுதியறிக்கையை 30.12.2012 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்,

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், சம்பவம் இடம் சென்று பார்வை

மற்றும் மாரிதி விரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சாட்சிகைள சரிவர வர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்படசமாக விசாரணை செய்து வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi